


இந்தியாவில் மூத்த குடிமக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக முக்கிய ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.

ஜப்பான், சீனா, அமெரிக்கா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம், வர்த்தகத்தை பயமுறுத்தி வரும் முக்கியமான பிரச்சனை என்றால் அது குறைந்து வரும் இளம் தலைமுறையினரின் மக்கள் தொகை தான்.

இந்த நிலையில் இந்திய முதியோர் அறிக்கை 2023 என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் மக்கள்தொகை நிதியம் (UNFPA) மற்றும் சர்வதேச மக்கள்தொகை அறிவியல் அமைப்பு (ஐஐபிஎஸ்) உடன் இணைந்து செய்யப்பட்ட ஆய்வில் முக்கியமான விஷயங்கள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

இதன்படி 2022 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் தேதி நிலவரப்படி இந்தியாவில் 60 வயதிற்கும் அதிகமாக இருக்கும் முதியவர்களின் எண்ணிக்கை 149 மில்லியனாக இருந்தது, இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 10.5 சதவீதமாகும்.

இந்த எண்ணிக்கை 2050 ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக வளர்ச்சி அடைந்து 20.8 சதவீதமாக உயர்ந்து 347 மில்லியனாக இருக்கும் என இந்த ஆய்வறிக்கையில் கண்டறியப்பட்டு உள்ளது.2100 ஆம் ஆண்டுக்குள் இந்த அளவு 36 சதவீதமாக உயரும் எனவும் கணிக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவில் முதியோர்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிகரித்து வருவதாகவும், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் குழந்தைகளின் எண்ணிக்கையை விடவும் முதியோர்களின் எண்ணிக்கை

அதிகமாக இருக்கும் என்றும் இது 2046 ஆம் ஆண்டில் நடக்க வாய்ப்புள்ளதாக இந்திய முதியோர் அறிக்கை 2023 என்ற ரிப்போர்ட் கூறுகிறது.

இதைவிட முக்கியமாக இந்தியாவில் இருக்கும் முதியோர்களின் எண்ணிக்கையில் சுமார் 40 சதவீதம் பேர் மோசமான நிதிநிலையில் இருப்பதாகவும், இதன் மூலம் முதியவர்களின் வாழ்க்கை முறை மற்றும் சுகாதார வசதிகள் பெறுவதில் அதிகப்படியான சவால்கள் இருக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலவரப்படி உலகிலேயே அதிகப்படியான இளைஞர்கள் கொண்ட நாடாக உள்ளது இந்தியா. இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 65 சதவீதம் பேர் 35 வயதிற்கு கீழ் உள்ளனர்.

*Source: Online Data From New Media 2024*

*Nandhavanam – The Castle for Dignified Seniors – https:icaremylife.com – Phone: 9789012340*